பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 03 சனிக்கிழமை 15.02.2025 | அதிர்வு 199

## அடிதடி: சமரசம்



(எஸ்.நிதர்ஷன்)

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, நபர் ஒருவரைத் தாக்கிய பிரச்சினை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இரண்டு 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மிகப் பலவீனமான ஆட்சியே நாட்டில்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளாசல்

அண்மைக்கால வரலாற்றில் உருவான மிகவும் பலவீனமான ஆட்சியே இன்று நாட்டில் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான தேர்தல் தொகுதி அமைப்பாளர் நியமனப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பத்து பிரதான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தமது வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது. அவை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். இன்று, நாடு பயணிக்கும் பாதை தெளிவாகத் தெரிகின்றது. வலுவான அரசுக்குப் பதிலாக, வரலாற்றில் மிகவும் தோன்றிய மிகவும் பலவீனமான அரசே இங்கு காணப்படுகின்றது. 02▶



# யாழ்ப்பாணம் வந்த பிரதமர் பல நிகழ்வுகளில் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று சனிக்கிழமை வருகை தந்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரிக்கு வருகை தந்த பிரதமரை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் வரவேற்றார். தொடர்ந்து அங்கு ஆசிரிய மாணவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

05▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

### பஸ் நிலையத்தின் கழிப்பறைக்கு அருகில்

# தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு

இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கதிர்காமம் பொது பஸ் நிலையத்திலுள்ள கழிப்பறைக்கு அருகில் மேற்படி இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கதிர்காமம் பகுதிக்கு வெளியே இருந்து வந்தவர் என்றும், அவர் பல நாட்களாகக் கதிர்காமம் நகரத்தில் சுற்றித் திரிந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு மீட்கப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காகக் கதிர்காமம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### இலங்கைக்குக் கடத்தி வரப்படவிருந்த

# பெருந்தொகைப் பாதணிகள் தமிழகப் பொலிஸிடம் சிக்கின




(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் இராமேஸ்வரத்தில் படகில் ஏற்றிய பெருந்தொகைப் பாதணிகள் தமிழகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குப் பெருந்தொகைப் பொருள்கள் கடல் வழியாகக் கடத்திச் செல்வதாகத் தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் கடற்கரையில் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது படகில் சில முடைகளை ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடினர்.

முட்டைகளை மீட்ட பொலிஸார் அவற்றைச் சோதனையிட்ட வேளை பெருந்தொகைப் பாதணிகளை மீட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மிகப் பலவீனமான...**

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரிசையாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். நாட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் வெளிப்படையான கொள்முதல் முறைகளின்படி இடம்பெற வேண்டும். முதலீட்டாளர்களை அரசு தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

2028 ஆம் ஆண்டளவில் நாம் கடனைச் செலுத்த வேண்டும் என்பதால் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாடு செலுத்த வேண்டிய கடனையும் வட்டியையும் செலுத்த வேண்டுமானால் அரசு அதிக வருமானத்தையும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி இலக்குகளையும் அடைய வேண்டும். இவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஒரு நாடாக எம்மால் மீண்டு வர முடியும்.

இவ்வாறே சென்றால் இன்னுமொரு கடன் மறுசீரமைப்பிற்குச் செல்ல வேண்டி வரும்.

அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட இணக்கப்பாடு மற்றும் சர்வதேச பிணை முறி பத்திரதாரர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து ஆராயும் பொருளாதார வல்லுநர்கள், அவர்களுடன் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகளின் இலக்குகளை நாம் அடையாவிட்டால், மற்றொரு கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த இணக்கப்பாடுகளில் காணப்படும் பலவீனங்களை ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியதுடன் கடந்த அரசு செய்த தவறுகளை இந்த அரசும் முன்னெடுத்து வருகின்றது.

பல நிபுணர்கள் ஐ.எம்.எப். ஒப்பந்தங்களை ஆய்வு செய்துள்ளனர். அவர்களது பகுப்பாய்வுகளின் பிரகாரம், ஐ.எம்.எப். உடன்படிக்கைக்கு வந்த 59 வீத நாடுகள் இரண்டாவது அல்லது மூன்றாவது மறுசீரமைப்புக்குச் சென்றுள்ளன என வெளிப்படுத்தியுள்ளனர். இது இங்கு வெளிப்படுத்தப்படுவதில்லை. மற்றொரு கடன் மறுசீரமைப்பை நாடுவது நாட்டுக்கு ஒரு பேரழிவாகும்.

குறுகிய பிரச்சினைகளை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் ஆதாயம் தேடாது. நாடு குறித்து சிந்தித்தே செயற்பட்டு வருகின்றோம். இந்தத் தரவுகளை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

2020 பெப்ரவரியில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சியாக ஆரம்பிக்கப்பட்டது. 7 மாதங்களுக்குப் பிறகு, நாம் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டோம். சுதந்திர ஜனநாயக வரலாற்றில் குறுகிய காலத்தில் ஒரு கட்சியாகப் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களையும் வாக்குகளையும் வென்றெடுத்தோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டோம். தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் வந்துள்ளது. இதனை நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்.

கட்சிக்கென்று எந்த உறுப்பினர்களும் இல்லாதே கடந்த மூன்று தேர்தல்களிலும் எமது கட்சி பேட்டியிட்டது. அப்போது இருந்த ஐ.தே.க. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மிகுந்த நம்பிக்கையோடு ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்தனர். அவர்களில் 74 பேர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பதவி பறிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியினது அல்லது தொலைபேசி சின்னத்தினது பயணமென்பது தற்காலிகமான பயணமல்ல. இது நெடுந்தூர பயணம்." - என்றார்.









# யாழ். இந்துக் கல்லூரியில் பிரதமர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று காலை வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, யாழ். இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரி அதிபர் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாட்டில் ஈடுபட்டிருந்த மாணவர்களிடம் கலந்துரையாடிய பிரதமர் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

கல்லூரி அருங்காட்சியகம், மாணவர்களின் இணைப்பாட விதான செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

இதன்போது கல்லூரி மண்டபத்தில் பிரதமர் உரையாற்றியதுடன் பிரதமருக்கு பாடசாலை அதிபரால் நினைவுப் பரிசு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய இன்று பல்வேறு நிகழ்வுகளிலும், பொதுமக்கள் சந்திப்புக்களிலும் பங்கேற்கின்றார்.













# கனேடிய அரசிடமிருந்து இன்னமும் உதவிகளை எதிர்பார்க்கின்றோம்!

## தூதுவர் முன்னிலையில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு






"பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் செயற்பாடுகளை வரவேற்பதோடு கனேடிய அரசிடமிருந்து இன்னமும் உதவிகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்." – என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுப்படுத்தும், "எம்பவர் பெண்கள்" நிகழ்வு யாழ்ப்பானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ்ும் இதில் பங்கேற்றார்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், "கனேடிய அரசு வூசூ அமைப்பின் ஊடாக கடந்த காலத்தில் குறிப்பாக இறுதிக்கட்டப் போர் ஆரம்பித்த தருணங்களில் எமது மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது.

வடக்கிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்தநிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுவூட்டுவது சிறப்பானது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதில் அரசு அக்கறையாக உள்ளது. உலக வங்கியினர், ஐ.நா.வின் அனைத்து முகவர் அமைப்பினர் எனப் பல தரப்பட்டவர்கள் அண்மையில் எம்மை வந்து சந்தித்திருந்தனர். எமது தேவைப்பாடுகளைக் கூறியிருக்கின்றோம். எங்களுடைய ஏற்றுமதியை அதிகரிப்பதன் ஊடாக வலுவூட்டுவதற்கு முயற்சிகளை முன்னெடுக்கின்றோம். அதற்கான உதவிகளை எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.





# மூத்த ஊடகர் பாரதிக்கு மலையகத்தில் அஞ்சலி!









(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

மூத்த ஊடகவியலாளர் அமரர் இராஜநாயகம் பாரதிக்கு நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காசல்ரீ பகுதியில் உள்ள சமஹவுஸ் விருந்தகத்தில் நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் டக்லஸ் நாணயக்கார, செயலாளர் திலங்க காமினி , பொருளாளர் மு.இராமசந்திரன், தேசிய அமைப்பாளர் எஸ். தியாகு மற்றும் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர்கள் ஆகியோர் இணைந்து அன்னாரின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**யாழ்ப்பாணம் வந்த...**

தேசிய கல்வியற் கல்லூரியில், வடக்கு மாகாண கல்வித்துறையினர் எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந் துரையாடலும் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் பங்கேற் றதுடன், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்வி பணிப் பாளர் க.பிரட்லி ஜெனட், வலயக் கல் விப் பணிப்பாளர்கள் ஆகியோர் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலைமைகள் தொடர்பாக பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தனர். அத்துடன் பிரத மரும் சாதகமான பதில்களை வழங்கி னார்.

இதன் பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் புனரமைக் கப்பட்ட நூலகத் திறப்பு விழாவிலும் பிரத மர் பங்கேற்றார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் பிரதமர் விஜயம் செய்து அங்கு நடை பெற்ற நிகழ்விலும் பங்கேற்றார்.

அதேவேளை, பொதுமக்கள் சந் திப்புக்களிலும் பிரதமர் பங்கேற்றார்.

இந்த நிகழ்வுகளில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சிறீ பவானந்தராஜா, ஜெ.ரஜீவன் ஆகியோ ரும் பங்கேற்றனர்.







**அடிதடி...**

தரப்பினரதும் சம்மதத்துடன் சமரசமாக முடித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத் தரணி கௌசல்யாவும் உணவருந்திக் கொண்டிருந்த வேளை அவ்விடத்துக்கு வந்த இருவர், அவர்களுடன் கதைக்க முற்பட்ட நிலையில், தர்க்கமாக மாறி கைகலப்பில் முடிந்தது.

கைகலப்பில் நாடாளுமன்ற உறுப்பி னர் அர்ச்சுனா, நபர் ஒருவரின் தலை யில் பீங்கானால் அடித்தமையால், அவர் தலையில் காயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனது உயிருக்கு ஆபத்து என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதேவேளை, காயமடைந்த நபரும் தன் மீதான தாக்கு தலுக்குப் பரஸ்பர முறைப்பாட்டை வழங் கியிருந்தார்.

இந்நிலையில், நேற்று வெள்ளிக் கிழமை இரவு இரண்டு தரப்பினரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து யாழ். உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்போது இரண்டு தரப்பினரும் சமாதானமாகச் செல்வதாகவும், முறைப் பாடுகளை மீளப் பெற்றுக்கொள்வதாகவும் கூறி இருவரும் சமரசமாகச் செல்வதற்கு உடன்பட்டதை அடுத்து இரண்டு தரப்பி னருக்கும் இடையிலான பிரச்சினை பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தீர்க் கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் காதில் பூ

வெற்றிக் களிப்பில் - அதிகார மிதப்பில் - தங்களுக்குள் முரண்பட்டு மோதிக் கொள்ளும் அரசியல்வாதிகள், அதிகார வறுமையில் - அரசியல் பின்னடைவில் - தங்களுக்குள் ஒன்றிணைவது பற்றி, சேர்ந்து பணியாற்றுவது பற்றி, ஐக்கியமாக அரசியல் செய்வது குறித்து, அதிகம் பேசு வார்கள்.

அதிகாரத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரி பால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்க வும் தங்களது ரத கஜ துரக பதாதிகள் சகி தம் தங்களுக்குள் இரண்டு சுற்று அரசியல் பேச்சுக்களை நடத்தி இருக்கிறார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அதை அப்படித்தான் பார்க்க வேண்டும்.

ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து கடந்த இரண்டு வாரங்களுக்குள் இரு தலைவர்களின் அணிகளும் இரண்டு சுற்றுப் பேச்சு நடத்தி முடித்து இருக்கின் றன. இந்த இரு தலைவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜ்ஜிர அபயவர்த்தன, பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கமன்பில்ல, முன்னாள் அமைச்சர்கள் அநுரா பிரியதர் ஷன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த. ஷெஹான் சேமசிங்க, நிமல் லன்ஸா, நிமால் சிறிபால டி சில்வா, பிரேம்நாத் சி தொலவத்த, சாகல ரத்நாயக்கா போன் றோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டி ருக்கின்றனர் என்று தெரிய வருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிக ளுக்கு எதிரான யுத்தத்தில் வென்று, தென் னிலங்கையில் சர்வ அதிகாரமிக்க - அசைக்க முடியாத - தலைவராகக் கொடி கட்டிப் பறந்த போது, அதிகார வறுமை யில் தவித்த தரப்புகள், தாங்கள் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்காக தங்கள் வேற்றுமைகளை மறந்து, புறமொதுக்கி, ஒன்றிணைந்தார்கள்.

மைத்திரி - ரணில் கூட்டு 2014 பிற்பகு தியில் உருவானதன் இரகசியம் அதுதான்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக - ஆட்சியைப் பிடிப்பதற்காக - ஒன்றி ணைந்தவர்கள் அதைப் பிடித்ததும் தமக் குள் மோதிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

2015 ஆரம்பத்தில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் பதவியேற்று சொற்ப காலத்திலேயே இருவருக்கும் இடையில் முரண்பாடு வெடித்தது.

தேர்தலுக்கு முன்னர் ரணில் உட்பட்ட எதிரணி தரப்போடு சேர்ந்து ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டு, வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, அந்த வெற்றி மூலம் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை வைத்துக்கொண்டு சுதந்திர கட்சியின் தலைமைப் பதவியை மஹிந்த ராஜபக்ஷ விடமிருந்து பிடுங்கிக் கொண்டார். சுதந் திரக் கட்சித் தலைவரானதும், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட தமது வெற்றிக்கு உதவிய மற்றைய கட்சிகளுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன அரசியல் செய்ய முற்பட்டார். தாம் ஜனாதிபதி பதவிக்கு ஏறி வருவதற்கு உதவிய ஏணிகளை நெட்டித் தள்ளினார். பிரதமர் பதவியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவை அரச மைப்புக்கு முரணாகப் பதவி நீக்கி, யாரை எதிர்த்து நின்று தாம் ஜனாதிபதி பதவிக்கு வந்தாரோ அவரை - மஹிந்த ராஜபக்ஷவை - பின்கதவால் பிரதமராக் கினார். அந்தச் சட்டவிரோத அரசு 52 நாள்கள் நீடித்தது. ரணில் விக்கிரம சிங்கவும் ஏனையோரும் உயர்நீதிமன் றத்திடம் முறையிட்டு, ஆட்சியை - பிரத மர் பதவியை - மீளக் கைப்பற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அப்போது முரண்பட்ட தரப்பினர், இப்போது அரசியலில் - அதிகாரத்தில் - இருந்து முற்றாக விலக்கப்பட்டு, அதிகார வறுமையில் சிக்கி இருக்கின்ற போது, மீண்டும. இணைந்து செயற்படு வது பற்றிய பேச்சுக்களைத் தொடங்கி இருக்கிறார்கள்.

நல்லாட்சி அரசின் காலத்தில் கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டுத் தங்களுக் குள் மோதி, நாட்டையும் குட்டிச்சுவராக்கி, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்த அற்புதமான - அதிசய மான - வாய்ப்பையும் போட்டடித்து சின்னாபின்னமாக்கிய தரப்புகள், இப் போது ஐக்கியமாக அரசியல் நடவ டிக்கைகளை முன்னெடுப்பது குறித்துப் பேசி, மீண்டும் கூடிக் குலாவத் தொடங்கி இருக்கின்றன.

மக்கள் தலையில் மிளகாய் அரைக்க - அவர்கள் காதில் பூச்சுற்ற - மீண்டும் ஒரு தடவை தலைவர்கள் தயாராகிறார்கள் என்பதுதான் இதன் உட்கிடையான செய்தி.



# மாணவர் மத்தியஸ்த வழிகாட்டல் செயலமர்வு

(ஏ. எம். எம். இம்றான்)

கிண்ணியா அல் – அதான் மகா வித்தியாலத்தில் அதிபர் எம்.எஸ் அஸீஸ் தலைமையில் மாணவர்களுக்கான “மாணவர் மத்தியஸ்தம்” வழிகாட்டல் செயலமர்வு இடம்பெற்றது.

நீதி அமைச்சின் திருகோணமலை மத்தியஸ்தம் இணைப்பாளர் திருமதி என். எல்.நஸ்ரின், பாடசாலை மத்தியஸ்தம் இணைப்பாளர் எஸ்.எம். றிஸாத்கான் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.



பீ.பவானி, எப். றில்வான் பாத்திமா, எம்.ஆர்.றகீமா பானு வளவாளர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளையும், பிணக்குகளை எவ்வாறு கையான்று தீர்ப்பது பற்றிய தெளிவூட்டினர்.







# நோன்பு காலத்தை முன்னிட்டு சம்மாந்துறையில் சோதனை

**(பாறுக் ஷிஹான், சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

எதிர்வரும் நோன்பு காலத்தை முன்னிட்டு அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். எம். நௌசாத் தலைமையில் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் பழுதடைந்த மற்றும் களஞ்சியப்படுத்திய உணவுகளை வைத்திருந்த ஒன்பது கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஒன்பது கடை உரிமையாளர்களுக்கும் 25 ஆயிரம் ரூபா 10 ஆயிரம் ரூபா 5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது.

அண்மையில் சுகாதாரமற்ற டேஸ்ட் கடைகள் உட்பட கிழக்கு பொரியல் தொடர்பில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய சஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான சுகாதார குழுவினர் இந்தச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேச உணவகங்கள் உட்பட டேஸ்ட் கிழங்கு பொரியல் கடைகளின் சுகாதார நடைமுறைகளைப் பேணி உணவுகளைத் தயாரிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

உணவங்கள் சுத்தமில்லாதிருத்தல், நீண்ட நாள்களுக்குப் பொருத்தமில்லாதவாறு உணவுகளைத் தேக்கி வைத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இசையும் உதவியும்!

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இன்னிசை விருந்தும் ஒரு லட்சம் ரூபா நிதி உதவி வழங்கலும் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன், அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற வாரந்த நிகழ்வில், இராமநாதன் அரங்காற்றுகை பீடத்தைச் சேர்ந்த உதயகுமார் சாலினியின் இசைக்கச்சேரி இடம்பெற்றது.

ஹார்மோனியம் – இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – கலாவித்தகர் க.சிவகுமார், தபேலா – வித்துவான் ம. பிரபா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகக் கலந்து கொண்டனர்.

ஆச்சிரமத்தின் உதவித் திட்டங்களாக, மருதங்கேணி பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, கிராம மட்ட சிறுவர் விளையாட்டு நிகழ்வுக்காக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பட்டியோலை, சுன்னாகத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு மருத்துவச் செலவுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை நேற்று வெள்ளிக்கிழமை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GSM குணம்ஸ் சுப்பர்மார்க்கட் GUNAAM'S SUPERMARKET

## GUNAAM'S SUPER MARKET

## Family day SUPER DEAL

**14,15,16,17/02/2025**

SPECIAL DEAL 900g Kings Curry Powder 14.99

Mega deal 100$ க்கு மேல் கொள்வனவு செய்து 4lb மைசூர் பருப்பு packet ஒன்றையை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.




1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு!

## இரண்டு நாள்களுக்கு நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு

(எஸ். நிதர்ஷன்)




யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கல்லூரியின் அதிபர் அருட்தந்தை திருமகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபவனி, சஞ்சிகை வெளியீடு, பழைய மாணவர்கள் இடையேயான காற்பந்து மற்றும் துடுப்பாட்டப் போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொண்டாட்ட நிகழ்வுகளை நடைபவனி மற்றும் கல்லூரி பரிசளிப்பு விழா என இரண்டு தினங்களையும் அண்மித்து இரண்டு கட்டங்களாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முதல் நிகழ்வாக இடம்பெறும் நடைபவனியானது கல்லூரிக்கும் சமூகத்துக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மைக்காலமாக அதிகளவில் ஏற்படும் தொற்றா நோய்களை தடுத்தல் எனும் தொனிப்பொருளில் குறித்த விழிப்புணர்வு நடைபவனியை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

நடைபவனியானது எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு கல்லூரியில் உள்ள சிற்றாலயத்தில் அமைந்துள்ள பத்திரிசியாரின் உருவச் சிலைக்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகி சென். பற்றிக்ஸ் வீதியூடாக பிரதான வீதியை அடைந்து, பிரதான வீதியூடாக பஸ்ரியன் சந்தியை அடைந்து, அங்கிருந்து வைத்தியசாலை வீதி வழியாக கார்கில்ஸ் சந்தியை அடைந்து, அங்கிருந்து மணிக்கூட்டு வீதியூடாக எமது கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான லோங்கினுடைய உருவச் சிலை அமைந்துள்ள யாழ். பொது நூலகத்தை அடைந்து அங்கு சிறிய நிகழ்வு இடம்பெறவுள்ளது.

லோங்கினுடைய உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அங்கிருந்து பிரதான வீதியூடாக நடை பவனியானது மீண்டும் கல்லூரியை வந்தடையவுள்ளது. அங்கு கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விசேட சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. - என்றார்.

இந்த நிலையில் புலத்திலும் நிலத்திலும் வாழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் நிகழ்வுகளில் பங்கேற்குமாறு கல்லூரி நிர்வாகத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியா போகஸ்வே வெவ - மாமடு வீதி புனரமைக்கப்படாமையால் மக்கள் அவதி!

(கி.வசந்தன்)




வவுனியா, போகஸ்வே வெவ - மாமடு வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கபடாது உள்ளமையால் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட போகஸ்வே வெவ கிராமமானது குடியேற்றக் கிராமமாகும். வவுனியாவில் இருந்து குறித்த கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் மாமடு பகுதியில் இருந்து போகஸ்வே வெவ வரையிலான சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான வீதியானது நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் அவசர நோயாளர்களைக் கூட, அம்புலன்ஸ்களில் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களும் சீராக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இந்தக் கிராம மக்களும், அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களும் நகருக்கு போக்குவரத்து செய்ய முடியாது அவதியடைகின்றனர். குறித்த வீதியைப் புனரமைக்க அதிகாரிகளும், அரசசும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# தஹா நகர் மற்றும் இக்பால் வீதியை இணைக்கும் பாலத்தை புனரமைக்குக!

## பிரதேச மக்கள் கோரிக்கை

(மூதூர் ஜிப்ரான்)

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தஹா நகர் மற்றும் இக்பால் வீதியை இணைக்கும் பாலமான கெள்ளனாற்று பாலம் இடிந்து விழும் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் 1950 இற்கு முன் எந்த பாலமும் இருக்கவில்லை. பின்னர் மக்களின் பாவனை நாளாந்தம் அதிகரிக்க ஆரம்பித்ததால் இந்த பிரதேசத்தில் மரத்தாலான தற்காலிகமாக பாலம் ஒன்று அமைக்கப்பட்டது.

பின்னர் இந்தப் பாலம் மக்களின் பாவனைக்குத் தகுதியற்றதாக மாறியது. இதனால் 1976 ஆம் ஆண்டு கொங்ரிட் பாலமாக அமைக்கப்பட்டது.

ஆனால், தற்பொழுது இந்த பாலத்தின் நிலை மிகவும் மோசமாகக காணப்படுகிறது. இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பாலத்தைக் கடந்து மாணவர்கள் உள்ளடங்கலாக பெரும் எண்ணிக்கையான மக்கள் பயணித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பாலத்தைப் புனரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மட்டு. மாவட்டச் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர்!

(முஹம்மட் றிஸ்னாத்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர, பொது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் மக்கள் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜே. ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொது மக்கள் தங்கள் பிரச்சினைகளைப் பொறுப்பான அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதேவேளை ஆளுநர், மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகவீன மடைந்து சிகிச்சை பெற முடியாமல் தவிக்கும் இருவருக்கு ஆளுநர் நிதியத்தின் மூலம் சிகிச்சைக்கான நிதியுதவி, காசோலையாக ஆளுநரால் வழங்கப்பட்டது.



# தேயிலை கொழுந்து தரத்துக்கேற்ப பறிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டன

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக பூண்டுலோயா சீன் தோட்டத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு, தரத்துக்கு ஏற்ப தேயிலை கொழுந்து பறிப்பது தொடர்பாக பயிற்சிகள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வு பூண்டுலோயா சீன் தோட்டத்தில் நடை பெற்றது.

நடைமுறை மற்றும் தத்துவார்த்தமான இந்தப் பயிற்சித் திட்டத்தில், அறுவடையின் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தத் தேவையான அத்தியாவசிய அறிவு மற்றும் நுட்பங்கள் குறித்து அவர்களுக்கு தெளிவுப்படுத்தப்பட்டது.

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கே. ஆர். டபிள்யூ. பி. கஹந்தவ மற்றும் வளவாளர்களாக ஆலோசனை மற்றும் விரிவாக்கல் பிரிவின் விரிவாக்கல் உத்தியோகத்தர் திருமதி ஜீவிகா ராஜேந்திரன் ஆகியோர் இந்தப் பயிற்சிகளை வழங்கினர்.





# சுற்றுலா விஸாவில் வந்து நகைத் தொழில் செய்த இந்திய பெண் ஒருவர் கைதானார்!

(பாறுக் ஷிஹான் )

சுற்றுலா விஸாவில் வந்து நகைத் தொழிலில் ஈடுபட்ட இந்திய பெண் வியாபாரிக்கு கல்முனை நீதிவான் நீதிமன்று பிணை வழங்க உத்தர விட்டுள்ளது.

நகைத் தொழில் மற்றும் நகைக் கடைகளை நடத்துபவர்கள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவினர் ஆகியோரிடம் இருந்து கிடைக்கபெற்ற முறைப்பாட்டுக்கு அமைய சோதனை நடவடிக்கை மேற்கொண்ட கல்முனை தலைமையக பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டம் அருகில் வைத்து சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய பெண்ணைக் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இந்திய தமிழ்நாட்டை சேர்ந்த 48 வயதுடைய அழகச்சாமி தமிழ்ச்செல்வி ஆவார். அத்துடன் அவர் வசம் இருந்து மாதிரி நகைகளுடன் ஏனைய சில பொருள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். எதிர்வரும் திங்கட்கிழமை (17) வரை வழக்கு மறுதவணை இடப்பட்டது.

இவ்விடயம் குறித்து கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் குழுவினர் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# காரைதீவில் வேலையற்ற பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலிலும் போராட்டம்

**(எஸ்.அஷ்ரப்கான் , வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்புக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டமானது, அம்பாறை மாவட்டம், காரைதீவு சந்திக்கு அருகாமையில் ஆரம்பமானது. பல்வேறு சுலோகங்களை ஏந்தி பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.

இதன்போது, இதுவரை வேலை வாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனவும் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உப தலைவர் சதாசிவம் யாதுராஜ் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் தமது தொழில் உரிமையை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களை எழுப்பி உரிய தரப்பினர் தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர் எஸ்.ஜெகத் வருகை தந்து பார்வையிட்டார். பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.




# நிந்தவூர் பிரதேசத்தில் திடீர் சோதனை; 29 வயது பெண், 22 வயது ஆண் கைது!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

ஒரு தொகை ஐஸ் போதைப் பொருள், இலத்திரனியல் தராசு, 8 லட்சத்து 93 ஆயிரத்து 840 ரூபா பணம் என்பவற்றுடன் பெண் ஒருவரும், ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் தலைமையில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தீடீர் சோதனை நடவடிக்கை இன்று (15) சனிக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது, காரைதீவு போன்ற பொலிஸ் நிலையங்களில் கடமை புரியும் பொலிஸார் மற்றும் காரைதீவு இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினரால் போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனை செய்பவரின் வீடுகள் சோதனை செய்யப்பட்டன.

திடீர் சுற்றி வளைப்பின் போது 29 வயது மதிக்கத்தக்க பெண், 22 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் வீட்டைச் சோதனை செய்த வேளையில், ஒரு தொகை ஐஸ் போதைப் பொருள், போதைப் பொருள்களை நிறுக்க பயன்படும் இலத்திரனியல் தராசு, போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதாக சந்தேகப்படும் 8 லட்சத்து 93 ஆயிரத்து 840 ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட ஆணின் வீட்டைச் சோதனை செய்த வேளையில், ஒரு தொகை கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தக் கைது நடவடிக்கையானது, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸாரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மகா கும்பமேளாவிற்கு சென்ற கார் பஸ்ஸுடன் மோதி விபத்து; 10 பேர் பலி

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்வில் கலந்துக்கொள்வதற்காக சென்ற கார் ஒன்று எதிர் திசையில் பயணித்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 19 பேர் காயமடைந்துள்ளனர் .

நேற்று இரவு மிர்சாபூர் பிரயாக்ராஜ் நெடுஞ்சாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலிஸாரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கடற்றொழில் பிரச்சினைக்கு தீர்வு வழங்கக் கோரி காரைக்கால் கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்!

கடற்றொழில் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி தமிழகத்தின் காரைக்கால் பகுதி கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அண்மையில் இலங்கை கடற்பரப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரை இந்தியாவிற்கு அழைத்து சிகிச்சையாக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்துக்கு தங்களது எதிர்ப்பை வெளியிடும் வகையில் காரைக்கால் பகுதி கடற்றொழிலாளர்கள் கடந்த 11 ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பையும்முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நபரை மீண்டும் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதெனத் தமிழக மீன்வளத்துறை பணிப்பாளர் மொஹமட் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

காரைக்கால் பகுதி கடற்றொழிலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆந்திராவில் காதலர் தினத்தில் இளம் பெண் மீது ஆசிட் வீச்சு

ஆந்திராவில் அன்னமய்யா மாவட்டம், குர்ரம்கொண்டா பகுதியில் 23 வயதான யுவதி மீது இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தியும், ஆசிட்டை முகத்தில் வீசியும் தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தினால் அப்பெண்ணின் முகம், வாய், கழுத்து பகுதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து அந்த யுவதி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனவும் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில். தாக்குதலை மேற்கொண்ட இளைஞர் மதனப்பள்ளியைச் சேர்ந்த கணேஷ் எனத் தெரிய வந்துள்ளது.

மேற்படி யுவதிக்கு எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 29 திகதி திருமணம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் அரகேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேற்படி இருவருக்கும் ஏதேனும் காதல் பிரச்னையாக இருக்குமா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காதலர் தினத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், எதிராக பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# சீனாவுடன் மூலோபாய கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் குக்தீவுகள் பிரதமர்

சீனாவுடன் மூலோபாய கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக நியூசிலாந்துடன் இணைந்து காணப்படும் சுயேட்சை நாடாளுமன்ற மக்களாட்சியை கொண்ட குக்தீவுகள் தெரிவித்துள்ளது.

மேற்படி ஒப்பந்தமானது நியூசிலாந்துடனான குக்தீவுகளின் உறவில் பாதிப்பை ஏற்படுத்துமென தெரிவிக்கப் படுகிறது.

வடகிழக்கு சீனாவின் ஹீலாங்ஜியாங் மாகாணத்தின் தலைநகரில், சீனபிரதமரும் குக்தீவுகள் பிரதமரும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய தேசிய நலன்கள் மற்றும் நீண்டகால வளர்ச்சி இலக்குகள் போன்றவற்றில் இரு தரப்பும் பயனடைய வாய்ப்புக்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைய, இரு தரப்பும் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கடல் அறிவியல், விவசாயம், உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன.





# இஸ்ரேலிய கைதிகள் மூவரும், 369 பலஸ்தீனர்களும் விடுதலை

காசாவில் மூன்று இஸ்ரேலிய கைதிகளான அலெக்சாண்டர் ட்ருஃபனோவ், சாகுய் டெக்கல் சென் மற்றும் யைர் ஹார்ன் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் 369 பலஸ்தீனர்களை இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்டம் குறித்து ஹமாஸ் அமைப்பு அடுத்த வாரம் இஸ்ரேலுடன் மறைமுக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் 48,239 பேர் இறந்ததாகவும், 111,676 பேர் காயமடைந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இடிபாடுகளுக்கு அடியில் காணாமல் போன ஆயிரக்கணக்கானோர் இப்போது இறந்துவிட்டனர் என கருதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரஷ்யா , சீனாவிடமிருந்து அச்சுறுத்தல் ஏற்படவில்லை

## அமெரிக்க துணை ஜனாதிபதி தெரிவிப்பு

தங்களது கண்டம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய அச்சுறுத்தல்கள் ரஷ்யா மற்றும் சீனாவிடமிருந்து ஏற்படவில்லை எனவும் மாறாக உள்ளக தரப்பிலிருந்தே அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வோன்ஸ் விமர்சித்துள்ளார்.

மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்த விமர்சனத்தை முன்வைத்தார்.

யுக்ரைன் - ரஷ்யப் போர் தொடர்பில் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் முக்கிய அவதானம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

மாறாக அமெரிக்க துணை ஜனாதிபதி, ஐரோப்பா மற்றும் பிரித்தானிய



மீதான தங்களது விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்களது மதிப்பிலிருந்து பின்வாங்குவதாகவும் புலம்பெயர்வு மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களிலிருந்து விலகிச் செல்வதாகவும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வோன்ஸ் குற்றஞ்சாட்டினார்.

எனினும் அவரை தொடர்ந்து கருத்துரைத்த பல நாடுகளின் அரசியல் தலைவர்கள் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.

அமெரிக்க துணை ஜனாதிபதியின் கருத்து 'ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல" என்று ஜேர்மனிய பாதுகாப்பு அமைச்சர் விமர்சித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான ஐரோப்பாவுடன் அமெரிக்க துணை ஜனாதிபதி 'சண்டையிட முயற்சிக்கின்றார்" என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கை பிரதானி தெரிவித்துள்ளார்.

கனடா முரசு

சனிக்கிழமை 15/02/2025

## கடத்தல் முயற்சியின் சந்தேக நபருக்கு பொலிஸ் வலைவீச்சு

கனடாவின் பிரம்டன் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற கடத்தல் முயற்சி ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின் 02



# கனடிய தேசிய கொடிகள் விற்பனையில் அதிகரிப்பு

**கனடாவின் தேசியக் கொடி விற்பனையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**அண்மைய நாள்களாக உலக அரங்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் காரணமாக இவ்வாறு கனடாவின் தேசி யக்கொடிகளின் விற்பனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கல்கரியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் நிறுவனம் ஒன்று இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, கனடா மீது பிரயோகித்து வரும் அழுத்தங்கள் காரணமாக இந்த தேசப்பற்று உந்துதல் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவை அமெரிக்க மாநிலமாக இணைத்துக்கொள்ள போவதாக எச்சரித்துள்ளார்.

மேலும் பல்வேறு வரி விதிப்புகளை அறிவிக்கப்போவதாக அடிக்கடி மிரட்டி வருகிறார்.

இவ்வாறான ஓர் பின்னணிகளில் தேசிய கொடி விற்பனையில் அதிகரித்துள்ளது. ஏற்கனவே கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் உருக்கு மற்றும் அலுமினிய பொருட்கள் மீது 25 வீதமான அமெரிக்கா அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களை விடவும் அண்மைய நாட்களில் தேசப்பற்று செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவின் சில பகுதிகளில் தபால் விநியோகம் நிறுத்தம்



கனடாவின் சில பகுதிகளில் தபால் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கனடிய தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி ஒன்றாரியோ மற்றும் கியுபெக் ஆகிய மாகாணங்களில் இவ்வாறு தபால் விநியோகம் தற்காலிகமாகஇடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு மற்றும் கடும் பனிப்புயல் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் குறிப்பிட் 02



# அமெரிக்க வரி விதிப்பு குறித்து ஒன்றாரியோ மக்கள் கவலை

அமெரிக்க வரி விதிப்பு தொடர்பில் ஒன்றாரியோ மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஒன்றாரியோவைச் சேர்ந்த 76 வீதமானவர்கள் அமெரிக்காவின் வரி விதிப்பு தொடர்பில் கவலை கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

நனோஸ் ஆய்வு நிறுவனம் இது தொடர்பிலான கருத்துக் கணிப்பினை முன்னெடுத்துள்ளது.

சுமார் ஆயிரம் ஒன்றாரியோ பிரஜைகளிடம் இந்த கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனடாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்திகளுக்கு 25 வீத வரி விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

மேலும்,காலநிலை காரணமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதன் காரணமாக, தபால்களை சேகரிப்பது மற்றும் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கனடாவில் தொடரும் பனிப்புயல் காரணமாக கனடாவில் ரொறன்ரோ பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ரொறன்ரோ, பீல், ஹால்டன், யோர்க், டர்ஹம், ஹமில்டன் நயகரா, மோன் அவனியர், மற்றும் சிம்கோ உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் பாடசாலைகள் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர்.

இந்த சந்தேக நபரின் வரைபடம் ஒன்றையும் பீல் பிராந்திய பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வில்லியம்ஸ் பார்க் மற்றும் மரே வீதிகளுக்கு அருகாமையில் இந்த கடத்தல் முயற்சி இடம் பெற்றுள்ளது.

ஆயுதமுனையில் பெண் ஒருவரை கடத்த முயற்சிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கறுப்பு நிற கார் ஒன்றில் ஆயுத முனையில் பெண் ஒருவரை, மேற்படி நபர் கடத்த முயற்சித்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், மேற்படி பெண் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தப்பித்துக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் இந்திய பூர்வீகத்தை கொண்டவர் எனவும் பஞ்சாபி மொழியை பேசியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஐந்து அடி பத்து அங்குலம் உயரமுடைய நபர் என பொலிஸார் விபரித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# கனடாவின் ரொறன்ரோவில் பாடசாலைகளுக்கு விடுமுறை

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் கடந்த சில நாள்களாகக் காணப்படும் கடுமையானப் பனிப்பொழிவு காரணமாக அங்குள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ரொறன்ரோ, பீல் ஹால்டன், யோர்க், டர்ஹம், ஹமில்டன் ,நயகரா,மோன் அவனியர், மற்றும் சிம்கோ உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் பாடசாலைகள் மூடப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைக்கழகங்களும் மூடப்படுகின்றன எனவும் பாடசாலை போக்குவரத்து சேவைகள் இரத்து செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடுமையான பனிப்பொழிவு காரணமாக அப்பகுதியில் பல்வேறு வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன. எனவே வாகனங்களை மெதுவாக செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.



# வார இறுதி நாள்களில் ரொறன்ரோவில் 30 சென்றி மீற்றர் பனிப்பொழிவு நிலவும்

வார இறுதி நாள்களில் ரொறன்ரோவில் சுமார் 30 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கடுமையான பனிப்பொழிவு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை மற்றும் மதிய வேளைகளில் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


